2018 ஜூன் 8]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் இல்லாத திட்டத்தை நிறைவேற்ற மீண்டும் மீண்டும் கோரிக்கை வைக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக்கூறி, அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

160—

மாணவர் விடுதி

***4333—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சீளியூர் T. துரைசாமி கவுடர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11-25

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, சீளியூர், T. துரைசாமி கவுடர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா என்ற வினாவினை மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள்.

மேட்டுப்பாளையம் தொகுதி, சீளியூர், T. துரைசாமி கவுடர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழுகின்ற காலத்திலே வரலாறு படைத்து, வாழும் மனித உயிர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து உயிரினங்களுக்கும் ஈரமுது படைத்து காத்து அருளிய எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 'அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது' என்பார்கள். இது முதுமொழி. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னும் அச்சாணி இல்லாத அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அம்மா அவர்களின் நல்லரசும் அச்சாணி இல்லாத தேர் போல தானே கவிழும் என மனக்கணக்கு போட்டவர்களுக்கு, பதிலடி கொடுக்கும் விதத்தில் இன்றைக்கு தகப்பன் இல்லாத குடும்பத்தை தலைச்சன் பிள்ளைகள் காப்பது போல, இயக்கத்தையும், ஆட்சியையும் கட்டிக் காத்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்கு உட்பட்ட சீளியூர், T. துரைசாமி கவுடர் மேல்நிலைப் பள்ளி, மேற்குத் தொடர்ச்சி மலையினுடைய அடிவாரத்திலே அமைந்திருக்கின்ற பள்ளி. இப்பள்ளிக்கு பல்வேறு குக்கிராமங்களிலிருந்து மாணவர்கள் வருகைதந்து பயின்று வருகிறார்கள். குறிப்பாக, மலைப் பகுதி மாணவர்கள் மிக அதிக அளவில் இருக்கின்றார்கள். தற்போது மாணவியர் நல விடுதி ஒன்று இயங்கி வருகிறது. நல்லமுறையிலே

2018 ஜூன் 8]

செயல்பட்டு வருகிறது. அதுபோல் அங்கேயிருக்கின்ற மாணவர்கள் தங்கிப் படிக்க முடியாத சூழ்நிலையிருக்கின்ற காரணத்தினாலே, அந்த மாணவர்களுடைய நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து, அங்கே ஒரு மாணவர் விடுதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதோடு, ஏற்படுத்திக் கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 29 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவ மாணவியர் எண்ணிக்கை 1,770 ஆகும். 2017-2018 ஆம் ஆண்டில் 1,725 மாணவ மாணவியர்கள் விடுதியில் தங்கிப் பயனடைந்துள்ளனர். அனைத்து விடுதிகளும் அரசு சொந்தக் கட்டடங்களிலேயே செயல்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதியில் 6 பள்ளி விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 4 பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள், அதாவது, மேட்டுப்பாளையம், காரமடை, புஜங்கனூர் மற்றும் வெள்ளியங்காடு ஆகிய இடங்களிலும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி, சீளியூர் என்ற இடத்திலும் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி பெத்திக்குட்டை என்ற இடத்திலும் செயல்பட்டு வருகின்றன. சீளியூர், T. துரைசாமி கவுடர் மேல்நிலைப் பள்ளியில் 302 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மேற்காணும் பள்ளியைச் சுற்றி 8 கிலோ மீட்டர் தொலைவில், வெள்ளியங்காடு மற்றும் புஜங்கனூர் பள்ளி மாணவர் விடுதிகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. எனவே, சீளியூர், T. துரைசாமி கவுடர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தனியாக துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

[2018 ஜூன் 8

முற்பகல் 11-30

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட பகுதியிலே அதிகமான பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். உள்ளபடியே நான் வரவேற்கின்றேன். ஏனென்று சொன்னால், மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்திருக்கின்ற ஒரு தொகுதியாகும். பல்வேறு குக்கிராமங்களை உள்ளடக்கிய அந்தப் பகுதியிலே வெகுதூரத்திலிருந்து வருகின்ற மாணவர்கள் தங்கிப் படிப்பதற்குப் போதுமான வசதிகள் இல்லாத காரணத்தினால்தான் கடந்த காலத்திலே தனித் தனிப் பிரிவாக இருக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு தனித் தனியாக அங்கே விடுதிகள் கட்டிக் கொடுக்கப்பட்டு, இன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. இன்றைக்கு சிறுமகள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 800 மாணவ மாணவியர்கள் பயின்று வருகின்றார்கள். குறிப்பாக, ஆதிவாசிகள் வாழ்கிற மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலே உள்ள மாணவ மாணவியர்கள் அந்தப் பள்ளியில் பயின்று வருகின்றனர். பல்வேறு பள்ளிகள் பயனடைந்திருக்கின்ற இந்த வேளையில், சிறுமகள் பேரூராட்சியிலே அமைந்திருக்கின்ற இந்த மேல்நிலைப் பள்ளிக்கென ஒரு மாணவர் விடுதிகூட இல்லை. ஆகவே, இருபாலர் படிக்கின்ற அந்தப் பள்ளிக்கு இன்றைக்கு மாணவர்கள் நலன் கருதி. . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் அதற்கு இல்லையென்று சொல்லிவிட்டார்கள். நீங்கள் திரும்பத் திரும்ப அதையே கேட்கிறீர்கள். நீங்கள் என்ன கேட்க வேண்டுமோ அதைக் கேளுங்கள். கேள்வி நேரத்தில் நீங்கள் ரொம்ப விவரம் சொல்ல வேண்டாம். முடியுங்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *ஆகவே, சிறுமகள் பேரூராட்சியில் அமைந்திருக்கின்ற அந்த மேல்நிலைப் பள்ளிக்காவது ஒரு மாணவர் விடுதியை அமைத்துக் கொடுக்க மறுபரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

2018 ஜூன் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிக்கை படித்தபின் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110-ன்கீழ் அறிக்கை

டெல்டா மாவட்டங்களின் குறுவை நெல் சாகுபடிக்காக தொகுப்புத் திட்டம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர், கரூர் மாவட்டங்களில் உள்ள குறுவை சாகுபடி செய்யும் பகுதிகளில் பிரதானமாக மேட்டூர் அணையின் நீர் இருப்பைப் பொறுத்தே குறுவை நெல் சாகுபடி அமைகிறது. வழக்கமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம் 90 அடியாக இருக்கும் நிலையில், குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12 ஆம் தேதி அன்று பாசனத்திற்காக அணை திறக்கப்படும். அவ்வாறு*